தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# ராஜராஜன் 1000: விவசாயிகள் ஆர்வம்

First Published : 16 Dec 2010 12:00:00 AM IST



காஞ்சிபுரம் அருகே மாமண்டூர் பகுதியில் ஒற்றை நெல் சாகுபடி முறையில் இயந்திரங்களைக் கொண்டு செய்யப்படும் நடவு.

காஞ்சிபுரம்: விவசாயத்தில் நிலவும் ஆள்பற்றாக்குறையை சமாளிக்க பல்வேறு விவசாயிகள் செம்மை நெல் சாகுபடி முறைக்கு (ராஜராஜன் 1000) மாறி வருகின்றனர்.

இந்த முறையில் ஒரு ஏக்கர் பயிர் செய்ய 3 கிலோ நெல் விதை போதுமானது. சாதாரண முறையில் ஒரு ஏக்கர் பயிர் செய்ய 30 கிலோ நெல் விதை தேவைப்பட்டது.

மேலும் செம்மை நெல் சாகுபடி முறையில் தண்ணீர் தேவை குறைவு. சாதாரண முறையில் ஹெக்டேருக்கு 4500 கிலோ நெல் கிடைத்தால், இம் முறையில் 8 ஆயிரம் கிலோ வரை கிடைக்கும்.

நடவு, களை எடுத்தல் போன்ற விவசாயப் பணிகளுக்கு ஆள் பற்றாக்குறை நிலவுவதால் விவசாயிகள் வேறு வழியில்லாமல் தாமாகவே தற்போது செம்மைநெல் சாகுபடி முறைக்கு மாறி வருகின்றனர்.

இம் முறையில் டிராக்டர் மூலம் உழவு செய்யலாம். நடவு நடுவதற்கு இயந்திரங்களும், களை எடுக்க கோணாவீடர் கருவியும் உள்ளன.

தற்போது குறிப்பாக காஞ்சிபுரம்-மாமண்டூருக்கு இடைப்பட்ட பகுதிகளில் பல்வேறு இடங்களில் இந்த செம்மை நெல் சாகுபடி முறையை பயன்படுத்தி விவசாயிகள் விவசாயம் செய்யத் தொடங்கியுள்ளனர்.

இது குறித்து இம் முறையில் விவசாயம் செய்யும் விவசாயிகள் சிலரிடம் கேட்டபோது, "இம் முறை பற்றிய போதிய விவரங்கள் இன்னும் அனைத்து விவசாயிகளுக்கும் முழுமையாக தெரியவில்லை. இம் முறையில் பயிர் செய்யும்போது நீர் அதிகம் தேங்கிய படியே இருக்கக் கூடாது. மழைக்காலங்களில் நீர் தேங்கினால் நெல் பயிருக்கு பாதிப்பு ஏற்படுமோ என்ற அச்சம் விவசாயிகளுக்கு உள்ளது. விவசாயத்துறையில் இம் முறையில் உள்ள குறைபாடுகளையும் அதை நிவர்த்தி செய்யும் முறைகளையும் விவசாயிகளுக்கு விளக்க வேண்டும்' என்றனர்.

**"நாற்றங்காலை முறையாக பராமரித்தால் கூடுதல் மகசூல்'**

First Published : 16 Dec 2010 12:00:00 AM IST



விழுப்புரம் அடுத்துள்ள பிடாகம் கிராமத்தில் மேட்டுப்பாத்தி முறையில் நாற்றங்காலுக்காக மிள காய் விதையை விதைக்கும் விவசாயிகள்.

சிதம்பரம்: தமிழக விவசாயிகள் அதிக பரப்பளவில் மணிலா பயிரை சாகுபடி செய்து வருகின்றனர். குறிப்பாக மழை வளம் குறைந்த நிலத்திலும், நீர்ப்பாசனம் இல்லாத மானாவாரி நிலங்களிலும் அதிகளவில் பயிரிடப்பட்டு மணிலா ஒரு தனிப்பயிராகவே சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இத்தகைய நடைமுறைச் சூழலில் கர்நாடக மாநில விவசாயிகள் புதிய வேளாண் ஊடுபயிர் முயற்சியாக மணிலாவுடன் கேழ்வரகு சாகுபடி செய்து அதிகளவு லாபம், கால்நடைத் தீவனம், மண்ணின் வளம் பெருக்கம் போன்ற ஆக்கப்பூர்வமான பயன்களைப் பெற்று வருகின்றனர். இதுகுறித்து அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத்துறை உதவிப் பேராசிரியர் தி.ராஜ்பிரவீன் தெரிவித்தது:

கர்நாடக மாநிலத்தில் பெல்லாரி மாவட்டம் குறைந்தளவு மழை வளம் மற்றும் நீர்பாசனம் கொண்டது. கடந்த பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக மணிலாவே சாகுபடி செய்யப்பட்டு வந்தது. இத்தகைய நடைமுறையில் சில வேளாண் தன்னார்வ தொண்டு நிறுவங்களின் ஆலோசனை மற்றும் விரிவாக்க முயற்சிகள் காரணமாக மணிலா சாகுபடியுடன் சிறு மற்றும் குறு விவசாயிகள் பட்டை ஊடு பயிராக கேழ்வரகு சாகுபடியை இணைத்து சாகுபடி செய்தனர்.

இப்புதிய வேளாண் சாகுபடி முறையில் விவசாயிகள் மணிலா பயிரை 9 வரிசையாகவும், கேழ்வரகை 6 வரிசையாகவும் தொடர்ந்து பயிர் செய்தனர். விதையின் அளவு, நிலத்தின் தன்மைக்கேற்ப ஆழத்தில் கேழ்வரகை நடவு செய்ய வேண்டும்.

புதிய பட்டை ஊடுபயிர் சாகுபடி வாயிலாக சாறு உறிஞ்சும் பூச்சிகளின் செயல்பாடுகள் தடுக்கப்படுகின்றன. கேழ்வரகு ஒரு இயற்கை அரணாக இருந்து பூச்சி மற்றும் வைரஸ் நோய் தாக்குதலில் இருந்து மணிலா பயிரை பாதுகாக்கிறது. மேலும் மண்ணில் உள்ள நோய் காரணிகளும் ஊடுபயிர் வளர்ப்பு காரணமாக குறைந்தே காணப்படுகிறது. இவ்வாறு சாகுபடிப் பணிகளை மேற்கொண்ட விவசாயிகள் அதிக லாபத்தை பெற்றுள்ளனர். இவ்வாறு பட்டை ஊடுபயிர் வாயிலாக அதிகளவு கால்நடைத் தீவனம் மற்றும் ஆண்டு முழுவதும் ஒரு விவசாய குடும்பத்துக்குத் தேவையான உணவு தானியம் மிகக் குறைந்த செலவில் கிடைப்பதைக் காணலாம்.

இதுதவிர ஊடுபயிரான கேழ்வரகு நிலத்தில் தழைச்சத்தை நிலை நிறுத்தியும் அதிகளவு வேளாண் கழிவுகள் வாயிலாக நிலத்தை இயற்கை முறையில் வளப்படுத்தவும் உதவுகிறது.
இவ்வாறு தொடர்ச்சியாக வேளாண் சாகுபடிப் பணிகளை மேற்கொள்ளும்போது நிலத்தின் வளம், இயற்கை முறையில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் கட்டுப்பாடு ஏற்படுவதுடன் வறட்சியான காலக்கட்டத்தில் கூட மானாவாரி நிலங்களில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளின் பொருளாதார நலன்கள் பாதுகாக்கப்படுகின்றன.

பிற பயன்கள்: இந்த ஊடுபயிர் சாகுபடியில் மணிலா பாதிக்கப்பட்டாலும், கேழ்வரகால் லாபம் கிடைக்கிறது. மணிலா மற்றும் கேழ்வரகு சாகுபடியில், மணிலா அறுவடைக்கு பின்பு பாதுகாக்கப்படும்போது கேழ்வரகு தழைகளைக் கொண்டு பாதுகாக்கப்படுவதால் பாதுகாப்பு செலவீனம் வெகுவாக குறைகிறது, மணிலா வேருடன் அறுவடை செய்யப்படுகிறது.

நிலத்தில் உள்ள கேழ்வரகு தழைகள் நுண்ணுயிர்களுக்கு உணவாகவும், உறைவிடமாகவும் இருந்து மண்ணின் வளத்தை பாதுக்காக்கிறது. எனவே தமிழக மணிலா சாகுபடி விவசாயிகள் கர்நாடக மாநில விவசாயிகளைப் பின்பற்றி மணிலாவுடன் பட்டை ஊடுபயிராக கேழ்வரகை சாகுபடி செய்து அதிக லாபம் பெறலாம்.
மணிலாவுடன் பட்டை ஊடுபயிராக கேழ்வரகு சாகுபடி செய்துள்ள விவசாயிகள்.

**மணிலாவுடன் ஊடுபயிராக கேழ்வரகு சாகுபடி**

First Published : 16 Dec 2010 12:00:00 AM IST



மணிலாவுடன் பட்டை ஊடுபயிராக கேழ்வரகு சாகுபடி செய்துள்ள விவசாயிகள்.

சிதம்பரம்: தமிழக விவசாயிகள் அதிக பரப்பளவில் மணிலா பயிரை சாகுபடி செய்து வருகின்றனர். குறிப்பாக மழை வளம் குறைந்த நிலத்திலும், நீர்ப்பாசனம் இல்லாத மானாவாரி நிலங்களிலும் அதிகளவில் பயிரிடப்பட்டு மணிலா ஒரு தனிப்பயிராகவே சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இத்தகைய நடைமுறைச் சூழலில் கர்நாடக மாநில விவசாயிகள் புதிய வேளாண் ஊடுபயிர் முயற்சியாக மணிலாவுடன் கேழ்வரகு சாகுபடி செய்து அதிகளவு லாபம், கால்நடைத் தீவனம், மண்ணின் வளம் பெருக்கம் போன்ற ஆக்கப்பூர்வமான பயன்களைப் பெற்று வருகின்றனர்.

இதுகுறித்து அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத்துறை உதவிப் பேராசிரியர் தி.ராஜ்பிரவீன் தெரிவித்தது:

கர்நாடக மாநிலத்தில் பெல்லாரி மாவட்டம் குறைந்தளவு மழை வளம் மற்றும் நீர்பாசனம் கொண்டது. கடந்த பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக மணிலாவே சாகுபடி செய்யப்பட்டு வந்தது. இத்தகைய நடைமுறையில் சில வேளாண் தன்னார்வ தொண்டு நிறுவங்களின் ஆலோசனை மற்றும் விரிவாக்க முயற்சிகள் காரணமாக மணிலா சாகுபடியுடன் சிறு மற்றும் குறு விவசாயிகள் பட்டை ஊடு பயிராக கேழ்வரகு சாகுபடியை இணைத்து சாகுபடி செய்தனர்.

இப்புதிய வேளாண் சாகுபடி முறையில் விவசாயிகள் மணிலா பயிரை 9 வரிசையாகவும், கேழ்வரகை 6 வரிசையாகவும் தொடர்ந்து பயிர் செய்தனர். விதையின் அளவு, நிலத்தின் தன்மைக்கேற்ப ஆழத்தில் கேழ்வரகை நடவு செய்ய வேண்டும்.

புதிய பட்டை ஊடுபயிர் சாகுபடி வாயிலாக சாறு உறிஞ்சும் பூச்சிகளின் செயல்பாடுகள் தடுக்கப்படுகின்றன. கேழ்வரகு ஒரு இயற்கை அரணாக இருந்து பூச்சி மற்றும் வைரஸ் நோய் தாக்குதலில் இருந்து மணிலா பயிரை பாதுகாக்கிறது. மேலும் மண்ணில் உள்ள நோய்

காரணிகளும் ஊடுபயிர் வளர்ப்பு காரணமாக குறைந்தே காணப்படுகிறது. இவ்வாறு சாகுபடிப் பணிகளை மேற்கொண்ட விவசாயிகள் அதிக லாபத்தை பெற்றுள்ளனர்.
இவ்வாறு பட்டை ஊடுபயிர் வாயிலாக அதிகளவு கால்நடைத் தீவனம் மற்றும் ஆண்டு முழுவதும் ஒரு விவசாய குடும்பத்துக்குத் தேவையான உணவு தானியம் மிகக் குறைந்த செலவில் கிடைப்பதைக் காணலாம்.

இதுதவிர ஊடுபயிரான கேழ்வரகு நிலத்தில் தழைச்சத்தை நிலை நிறுத்தியும் அதிகளவு வேளாண் கழிவுகள் வாயிலாக நிலத்தை இயற்கை முறையில் வளப்படுத்தவும் உதவுகிறது. இவ்வாறு தொடர்ச்சியாக வேளாண் சாகுபடிப் பணிகளை மேற்கொள்ளும்போது நிலத்தின் வளம், இயற்கை முறையில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் கட்டுப்பாடு ஏற்படுவதுடன் வறட்சியான காலக்கட்டத்தில் கூட மானாவாரி நிலங்களில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளின் பொருளாதார நலன்கள் பாதுகாக்கப்படுகின்றன.

பிற பயன்கள்: இந்த ஊடுபயிர் சாகுபடியில் மணிலா பாதிக்கப்பட்டாலும், கேழ்வரகால் லாபம் கிடைக்கிறது. மணிலா மற்றும் கேழ்வரகு சாகுபடியில், மணிலா அறுவடைக்கு பின்பு பாதுகாக்கப்படும்போது கேழ்வரகு தழைகளைக் கொண்டு பாதுகாக்கப்படுவதால் பாதுகாப்பு செலவீனம் வெகுவாக குறைகிறது, மணிலா வேருடன் அறுவடை செய்யப்படுகிறது.

நிலத்தில் உள்ள கேழ்வரகு தழைகள் நுண்ணுயிர்களுக்கு உணவாகவும், உறைவிடமாகவும் இருந்து மண்ணின் வளத்தை பாதுக்காக்கிறது.
எனவே தமிழக மணிலா சாகுபடி விவசாயிகள் கர்நாடக மாநில விவசாயிகளைப் பின்பற்றி மணிலாவுடன் பட்டை ஊடுபயிராக கேழ்வரகை சாகுபடி செய்து அதிக லாபம் பெறலாம்.
மணிலாவுடன் பட்டை ஊடுபயிராக கேழ்வரகு சாகுபடி செய்துள்ள விவசாயிகள்.

**மொச்சைக்காய் விளைச்சல் குறைந்தது**

First Published : 15 Dec 2010 11:16:05 AM IST

கம்பம், டிச. 14: தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில், மொச்சைக்காய் விளைச்சல் குறைந்துள்ளது. சந்தையில் மொச்சைக்காய் வரத்து குறைவாக உள்ளதால், கிலோ ரூ. 40-க்கு விற்பனை செய்யப்படுகிறது.
கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் ஏகலூத்து, கம்பமெட்டு ரோடு, கோம்பை ரோடு பகுதியிலும், கூடலூரில், மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரப் பகுதியில் கல்லூடைச்சான் பாறை,

கழுதைமேடு, சரித்திரவு, வாழ்த்து படுகை, பளியன்குடி, எள்கரடு, புது ரோடு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மானாவாரிக் காடுகளில் 10 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் மொச்சைக்காய் சாகுபடி செய்து வருகின்றனர்.

மொச்சை விவசாயிகள் கடந்த 4 மாதங்களுக்கு முன்பு மொச்சை விதைத்தனர். இதனை தொடர்ந்து கார்த்திகை முதல் வாரத்தில் மொச்சைக்காய் விளைச்சல் அடைந்து, சந்தைக்கு விற்பனைக்கு வந்தது. சந்தையில் கிலோ ரூ. 45-க்கு விற்பனை செய்யப்பட்டது. தொடர்ந்து மொச்சைக்காயின் வரத்து அதிகரிக்க தொடங்கியதால், கிலோ ரூ. 19 வரை விலை குறைந்தது.

இப் பகுதியில் பெய்துவந்த தொடர் மழையின் காரணமாக பூக்கள் உதிர்ந்து, காம்புகள் மட்டுமே செடியில் உள்ளன. இதனால், மொச்சைக்காயின் வரத்து மிகக் குறைந்து, ஒரு நாளைக்கு 100 முதல் 150 கிலோ வரை மட்டுமே சந்தைக்கு வரத்து உள்ளது.

கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் விளையும் மொச்சையின் தரமும், சுவையும் அதிகமாக உள்ளதால், விருதுநகர், திண்டுக்கல், மதுரை, திருச்சி, சென்னை, கேரள மாநிலத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் கார்த்திகை முதல் வாரத்திலிருந்தே இங்கு வந்து வாங்கிச் செல்வர்.

தற்போது, மொச்சைக்காய் ஒரு கிலோ மொத்த வியாபாரிகளுக்கு ரூ. 35-க்கும், சில்லரை வியாபாரிகளுக்கு ரூ. 40-க்கும் விற்கப்பட்டு வருகிறது.

**மழையால் வரத்து குறைவு: காய்கறிகள் விலை உயர்வு**

First Published : 15 Dec 2010 07:45:58 PM IST

காரியாபட்டி, டிச. 14: தொடர் மழையால் காய்கறி செடிகள் நீரில் மூழ்கி அழுகிவிட்டதால் காய்கறிகள் வரத்து குறைத்துவிட்டது. இதனால் காரியாபட்டி பகுதியில் காய்கறி விலை கடுமையாக உயர்ந்து விட்டது.

தேனி, மதுரை மாவட்டங்களில் இருந்து காரியாபட்டிக்கு காய்கறிகள் கொண்டு வரப்படுகின்றன. மற்ற மாவட்டங்களை விட சாதாரண காலங்களில் காரியாபட்டி பகுதியில் காய்கறிகள் விலை சற்று கூடுதலாக இருக்கும்.

கடந்த 10 நாள்களாக தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. மதுரை, தேனி உள்ளிட்ட மாவட்டங்களில் மழைக்கு காய்கறி செடிகள் நீரில் மூழ்கின. இதனால் காரியாபட்டிக்கு காய்கறிகள் வரத்து குறைந்துவிட்டது.

எனவே கத்திரிக்காய் விலை கிலோவிற்கு ரூ. 80 உயர்ந்துள்ளது. மற்ற காய்கறிகளின் விலையும் இருமடங்காக உயர்ந்துவிட்டது.

காரியாபட்டி சந்தையில் காய்கறிகளின் விலை நிலவரம் (கிலோ மதிப்பில்) கத்திரி-ரூ.80, வெண்டை-ரூ. 22, அவரை-ரூ. 55, அதலை-ரூ. 45, பாகற்காய்-ரூ. 50, காரட்-ரூ. 45, முள்ளங்கி-ரூ. 24, பட்டர்பீன்ஸ்-ரூ. 55, உருளை-ரூ. 24, காலிபிளவர்-ரூ. 45, முட்டைக்கோஸ்-ரூ.24, முருங்கைக்காய்-ரூ. 90, பீட்ரூட்-ரூ. 20, சவ்சவ்-ரூ. 20, புடலை-ரூ. 24, பட்டாணி-ரூ.180, மொச்சை-ரூ. 48, தக்காளி-ரூ. 40, சிறுகிழங்கு-ரூ. 34, பல்லாரி-ரூ. 40, வெங்காயம்-ரூ.40, மிளகாய்-ரூ. 32, கருணை-ரூ. 28, சேம்பு-ரூ. 36, சேனை-ரூ. 34, மல்லி-ரூ. 40, இஞ்சி-ரூ. 40, எலுமிச்சை-ரூ. 35, பீர்க்கை-ரூ. 20 என விற்பனையானது.

**"பயிர்ச் சேதம் குறித்து மனு அளிக்கலாம்'**

First Published : 15 Dec 2010 11:40:18 AM IST

மதுரை, டிச.14: மதுரை மாவட்டம், டி.கல்லுப்பட்டி விவசாயிகள் பயிர்ச் சேதம் குறித்து வேளாண் அலுவலர் உள்ளிட்ட அரசு அலுவலர்களிடம் மனு அளிக்கலாம் என, டி. கல்லுப்பட்டி வேளாண் உதவி இயக்குநர் மு.இளங்கோ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளது:

வெள்ளத்தால் ஏற்பட்ட பயிர்ச் சேதம் குறித்து, டி.கல்லுப்பட்டி வட்டாரத்தில் உள்ள வன்னிவேலம்பட்டி, குமராபுரம், வி.ரெட்டிரப்பட்டி, பாப்பையாபுரம், பி.சுப்புலாபுரம், சிலார்பட்டி உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் வேளாண்மைத் துறை அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டது. இதில், பருத்தி, பயறு வகைகள், நெல், சிறுதானிங்கள் பாதிக்கப்பட்டது கண்டறியப்பட்டு, மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

கனமழையால் ஏற்பட்ட பயிர்ச்சேதம் குறித்து, பாதிக்கப்பட்ட விவசாயிகள் பயிர்ச்சேத விவரங்களை மனுவாக எழுதி அருகில் உள்ள வேளாண் துறை, கிராம நிர்வாக அலுவலர், வட்டாட்சியர் அலுவலகத்தில் உடன் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும், நெற்பயிருக்கு காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் காப்பீடு செய்து பயனடையவும் விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

தினமலர்

ரூ.44.21 கோடி ஒருங்கிணைந்த உரக்கிடங்கு திட்டம் இழுபறி: பணி துவங்குவதில் சிக்கல்

பதிவு செய்த நாள் : டிசம்பர் 16,2010,01:10 IST

பல்லாவரம்: தென்சென்னை புறநகரின் குப்பை பிரச்னைக்கு நிரந்தர தீர்வாக அமையும் வகையில் கொண்டு வரப்பட்ட வேங்கடமங்கலம் உரக்கிடங்கு திட்டம், பல ஆண்டுகளாக தொடர்ந்து இழுபறியில் இருந்து வருகிறது. டெண்டர் முடிந்து பணி உத்தரவு வழங்கப்பட்டு, சுற்றுச்சூழல் அனுமதி உள்ளிட்ட அனைத்திற்கும் "கிரீன் சிக்னல்' கிடைத்துவிட்ட நிலையில், கான்ட்ராக்டரின் மெத்தனம் காரணமாக இன்னும் பணிகள் துவங்கப்படவில்லை. தென்சென்னை புறநகரில் தாம்பரம், பல்லாவரம், ஆலந்தூர் ஆகிய பெரிய நகராட்சிகளும், உள்ளகரம் - புழுதிவாக்கம், பம்மல், அனகாபுத்தூர் ஆகிய மூன்றாம் நிலை நகராட்சிகளும் உள்ளன. இந்நகராட்சிகளில் தினசரி டன் கணக்கில் குப்பைகள் சேகரமாகின்றன.

இந்த குப்பைகளை அப்புறப்படுத்த முறையாக திட்டமிடப்படாததால், குடியிருப்பு பகுதிகளுக்கு அருகிலும், நெடுஞ்சாலை ஓரங்களிலும், நீர்நிலைகளிலும் கொட்டப்படுகின்றன. இதனால், சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளதுடன், நீர்நிலைகள் பாழாகி, நிலத்தடி நீர்வளம் கடுமையாக மாசடைந்து வருகிறது. இந்த குப்பை பிரச்னைக்கு நிரந்தர தீர்வை ஏற்படுத்தும் வகையில், தாம்பரத்தை அடுத்த வேங்கடமங்கலத்தில் பிரமாண்ட உரக்கிடங்கு திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது. இதற்காக, 2004ல் வேங்கடமங்கலம் ஊராட்சியில், ஒரு கோடியே ஒன்பது லட்ச ரூபாய் செலவில், 50 ஏக்கர் பரப்பளவிலான நிலத்தை காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகம் வாங்கியது. அதில், 75 லட்ச ரூபாய் செலவில், சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டது.

ஆரம்பத்தில், இத்திட்டத்திற்கு 49.47 கோடி ரூபாய் மதிப்பில், திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டது. மத்திய கண்காணிப்பு குழு இத்திட்டத்திற்கு, 44.21 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் அளித்தது. இதன் மூலம், குப்பைகளை சேகரித்து, வேங்கடமங்கலத்திற்கு கொண்டு செல்ல வாகனங்கள், உபகரணங்கள் வாங்குவது, கணினி எடை மேடை, குப்பைகளை பிரிக்கும் நிலையம், 170 டன் திறன் கொண்ட உரம் தயாரிக்கும் நிலையம், நவீன முறையில் தேவையற்ற திடக்கழிவுகளை நிரப்புவதற்கான தளம் அமைத்தல், புல்டோசர், டிப்பர், மண் வாரி இயந்திரம் வாங்குவது. குப்பைகளை எடுத்து செல்லும் வாகனங்களை கழுவ, அதிக அழுத்தம் உள்ள தண்ணீர் குழாய் வசதி செய்தல், பார்க்கும் கூடம் அமைத்தல், பொதுமக்களுக்கு திட்டம் தொடர்பான விளக்கங்களை அறிய செய்தல் உள்ளிட்ட பணிகளை செய்ய முடிவு செய்யப்பட்டது.

இத்திட்டத்திற்கு ஹைடிரோஏர் டெக்டானிக்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால், சுற்றுச்சூழல் துறை அனுமதி கிடைக்காததால், இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டிருந்தது. சமீபத்தில் சுற்றுச்சூழல் அனுமதியும் கிடைத்து விட்டது. ஆனால், தற்போது பணிகளை துவங்காமல், கான்ட்ராக்டர் தாமதித்து வருவதாக நகராட்சி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனால் குப்பைகள் ஏரிகளில் கொட்டப்படுவதும், சுகாதார சீர்கேடு அதிகரித்து வருவதும் தொடர்கதையாக உள்ளது.

இதுகுறித்து நகராட்சி அதிகாரிகள் கூறுகையில், "திட்டம் துவங்கப்பட்ட 20 ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும். தற்போது பணிகளை துவங்க எந்த இடையூறும் இல்லை. வேகமாக திட்டத்தை முடித்து தருமாறு கான்ட்ராக்டரிடம் வலியுறுத்தியுள்ளோம். பணிகள் துவங்கிய அடுத்த 18 மாதங்களுக்குள் நிறைவு செய்து, திடக்கழிவு  திட்டத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வர தீவிரமாக  முயற்சி மேற்கொள்ளப்படும்' என்றனர்.

**தொட்டியம் முன்னோடி விவசாயிக்கு தேசிய வாழை மாநாட்டில் விருது**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 16,2010,02:46 IST

தொட்டியம்: தொட்டியத்தை சேர்ந்த முன்னோடி விவசாயிக்கு திருச்சியில் நடந்த உலக வாழை மாநாட்டில், "தேசிய நல்ல வாழை' எனும் விருது வழங்கப்பட்டது.
திருச்சி மாவட்டம், தொட்டியத்தை சேர்ந்தவர் சுகுமார். இவர் அகில இந்திய வாழை அபிவிருத்தி கழக துணைத்தலைவர் உட்பட பல்வேறு பொறுப்புகளில் உள்ளார். இவர்  தேசிய வாழை ஆராய்ச்சி மையம் வழங்கும் புதிய தொழில் நுட்பங்கள் அனைத்தையும் கடைப்பிடித்து சாகுபடியில் ஈடுபட்டதோடு, மற்ற விவசாயிகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

வெளி மாநிலங்களில் பயிரிடப்பட்ட வாழை ரகங்களை தொட்டியம் பகுதியில் அறிமுகம் செய்து முன்னோடி விவசாயியாக திகழ்கிறார். திருச்சியில் வாழை உற்பத்தி பயன்பாடு மேம்பாட்டு சங்கம் மற்றும் தேசிய வாழை ஆராய்ச்சி மையம் சார்பில், வாழை சாகுபடியில் உயிரிசார் மற்றும் உயிரிசாரா மேல ◌ாண்மை குறித்த உலக வாழை மாநாடு நடந்தது.

ஃபிரான்ஸ் நாட்டை சேர்ந்த சர்வதேச பல்லுயிர் பெருக்க விஞ்ஞானி ஸ்டீபன்வீஸ், தமிழக வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி, வாழை ஆராய்ச்சி மைய இயக்குனர் முஸ்தபா, முதன்மை விஞ்ஞானி சுந்தரராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்திய வேளாண்மை ஆராய்ச்சி குழும துணை இயக்குனர் சிங், தொட்டியம் முன்னோடி விவசாயி சுகுமாருக்கு நல்ல வாழை விருது வழங்கினார்.விருது பெற்ற சுகுமாரை தொட்டியம் வெற்றிலை வியாபாரிகள் சங்கத்

தலைவர் தியாகராஜன், வாழை சாகுபடியாளர் சங்க மாவட்ட துணைச் செயலாளர் மணிக்குட்டி, இணைச் செயலாளர் சந்திரசேகரன், முற்போக்கு வாழை விவசாயிகள் ராமதாஸ், மயில்வாகனன், ரங்கநாதன், வரதராஜபுரம் கிருஷ்ணமூர்த்தி உட்பட பலர் வாழ்த்தினர். இவர் ஏற்கனவே 2003ம் ஆண்டு சிறந்த வாழை உற்பத்தியாளர் விருது பெற்றுள்ளார்.

**கறவை பால் விற்பனை விலை நிர்ணய பட்டியல்உற்பத்தியாளர் சங்கங்களுக்கு அதிரடி உத்தரவு**
பதிவு செய்த நாள் : டிசம்பர் 16,2010,01:18 IST

திருநெல்வேலி:கறவை பால் விற்பனை விலை நிர்ணய பட்டியலை நுகர்வோருக்கு தெரிவிக்கும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.நெல்லை ஆவின் நிர்வாகம் மற்றும் பல்வேறு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் தொடர்ந்து பல்வேறு முறைகேடுகள் நடந்து வருகிறது. இதுதொடர்பாக சென்னை ஆவின் விஜிலென்ஸ் அதிகாரிகள் குழுவினர் தொடர்ந்து விசாரணை நடத்துகின்றனர்.

இந்நிலையில் "தினமலர்' செய்தி எதிரொலியாக நெல்லை பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் 50 கறவை கூடங்களில் கறவை பால் கொள்முதல் மற்றும் விற்பனை விலை பட்டியலை ஒட்ட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.பசும்பால் லிட்டருக்கு 15 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டு 20 ரூபாய்க்கும், எருமை பால் லிட்டருக்கு 21 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டு 26 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரை லிட்டருக்கு 2 ரூபாய் முதல் 4 ரூபாய் அதிகமாக விற்பனை செய்து விற்பனையாளர்கள் பலர் கொள்ளை லாபம் அடித்து வந்தனர்.மேலும், இந்த விற்பனையை அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும் என்றும், கூடுதல் விற்பனைக்கு பால் விற்பனை செய்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.ஆனால் பால் விலை நிர்ணயம் செய்யப்பட்டாலும் இன்னும் பல்வேறு இடங்களில் தண்ணீர் கலந்த கலப்பட பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஆனால் சுகாதார துறை அதிகாரிகள் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளனர். விலையை கட்டுப்படுத்துவதோடு அதிகாரிகள் நின்றுவிடாமல் தரமான பால் விற்பனை செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் விரும்புகின்றனர்.அதிக விலைக்கு பால் விற்பனை செய்த விற்பனையாளர்கள் 3 பேர் சஸ்பென்ட் செய்யப்பட்டனர்.

ஆளுங்கட்சி வி.ஐ.பிகள் முயற்சியின் பேரில் இந்த சஸ்பென்ட் உத்தரவை நீக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.கறவை பால் ஒருபுறமிருக்க, பால் பாக்கெட்டுகளும் அதிக விலைக்கு பல்வேறு இடங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதன் விலையையும் கட்டுப்படுத்த வேண்டும். பினாமி பெயர்களில் வாங்கப்பட்டுள்ள பால் கார்டுகளும் அதிக அளவில் காணப்படுகிறது. உடனடியாக இவற்றை ஆய்வு செய்து இக்கார்டுகளை ரத்து செய்து அரசுக்கு ஏற்படும் வருமான இழப்பை தவிர்க்கவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வாடிக்கையாளர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

**மழையினால் பயறு செடிகள் நாசம் : நிவாரணம் வழங்கிட கோரிக்கை : எட்டயபுரத்தில் விவசாயிகள் மனு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 16,2010,01:22 IST

எட்டயபுரம் : எட்டயபுரம் தாலுகாவில் தொடர்மழையினால் பாதிக்கப்பட்ட பயறு வகைகளுக்கும், நோயினால் இறந்துபோன கால்நடைகளுக்கும் நிவாரண நிதி வழங்க வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் தூது குழுவினர் எட்டயபுரம் தாலுகா அலுவலகத்தில் கோரிக்கை மனு கொடுத்தனர்.

எட்டயபுரம் தாலுகாவில் தொடர்மழை காரணமாக பாசிபயறு, உளுந்து வகைகள் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் நிவாரண உதவித்தொகை வழங்க வேண்டும். மேலும் இறந்துபோன ஆடுகளுக்கு குறிப்பாக உருளைக்குடி, உசிலம்பட்டி, சுரைக்காய்பட்டி, இளம்புவனம், எட்டயபுரம் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் கால்நடை டாக்டர்கள் ஆய்வு நடத்தி உரிய நிவாரணம் வழங்க வலியுறுத்தி விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் நல்லையா, தாலுகா தலைவர் ரெங்கசாமி, செயலாளர் கிருஷ்ணமூர்த்தி ஆகிய தூதுகுழுவினர் எட்டயபுரம் தாலுகா அலுவலகத்தில் மனு கொடுத்தனர்.

**இயற்கை வழி விவசாயம் விழுப்புரத்தில் பயிலரங்கம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 16,2010,00:17 IST

விழுப்புரம் : இயற்கை வழி விவசாயம் குறித்த பயிற்சி முகாம் விழுப்புரத்தில் நடக்கிறது. விழுப்புரம் மாவட்ட மூலிகை மற்றும் மரம் வளர்ப்போர் சங்கத்தின் சார்பில் "ஜீரோ பட்ஜெட்' இயற்கை வழி விவசாயம் குறித்த நான்கு பயிற்சி முகாம் நடக்கிறது. விழுப்புரம் ஜெயசக்தி திருமண மண்டபத்தில் வரும் 21ம் தேதி முதல் 24ம் தேதி வரை நடக்கும் இம்முகாமில் சுபாஷ் பாலேக்கர் கலந்து கொண்டு 30 ஆண்டு கால இயற்கை வழி விவசாய அனுபவம் மற்றும் தொழில் நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கிறார்.

இதில் விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை மற்றும் புதுச்சேரியை சேர்ந்த விவசாயிகள், மகளிர் சுய உதவிக்குழுக்கள், விவசாய விலைபொருள் வியாபாரிகள் கலந்து கொள்கின்றனர். இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட மூலிகை மற்றும் மரம் வளர்ப்போர் சங்க நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.

**விவசாயிகள் சங்க செயற்குழு கூட்டம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 16,2010,02:55 IST

கிருஷ்ணகிரி: தமிழக விவசாயிகள் சங்க வேப்பனப்பள்ளி ஒன்றிய செயற்குழு கூட்டம் வேப்பனப்பள்ளியில் நடடந்தது.
மாவட்ட செயலாளர் பெரியண்ணன் தலைமை வகித்தார். செந்தில்குமார், ராஜேந்திரன், சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய துணை செயலாளர் வெங்கடேசன் வரவேற்றார். மாநில துணை தலைவர் ராமகவுண்டர் கோரிக்கைகள் குறித்து பேசினார். "கெலவரப்பள்ளி அணை தண்ணீரை பேரிகை, வேப்பனப்பள்ளி வழியாக பர்கூருக்கு கொண்டு செல்ல வேண்டும். நெடுசாலை மார்கண்டேயன் நதிக்கு குறுக்கே தரைபாலம் அமைக்க வேண்டும். காட்டுப்பன்றி மற்றும் குரங்குகள், யானைகளால் ஏற்படும் பயிர் சேதத்தை வனத்துறையினர் கட்டுப்படுத்த வேண்டும். மாமிடி கானப்பள்ளியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும்' உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர்.
மாவட்ட தலைவர் லோகாபிராம், பொது செயலாளர் சுந்தரேசன்,பொருளாளர் வண்ணப்பா, துணை தலைவர்கள் சுப்பிரமணி, மாரியப்பன், சொக்கலிங்கம், மகளிர் அணி ஜோதிகா, மல்லிகா உட்பட பலர் கலந்து கொண்டனர். ஒன்றிய இளைஞர் அணி செயலாளர் அசோக்குமார் நன்றி கூறினார்.

### அவரை விற்பனை ஊக்குவிக்க உணவுத்திருவிழா

பதிவு செய்த நாள் : டிசம்பர் 16,2010,02:54 IST

ஓசூர்: ஓசூரில் பொதுமக்கள் மத்தியில் அவரை பயிர் விற்பனையை ஊக்குவிக்க அவரை மூலம் 40 வகை உணவு வகைகள் தயாரித்து உணவு திருவிழா நடந்தது.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழகத்தில் அதிகளவு அவரை பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. அவரை பயிரை கொடியில் இருந்து பறித்த ஓரிரு நாள் மட்டும் சமையல் செய்ய முடியும். அதன் பின் அவற்றை வைத்திருந்தால் புழு உற்பத்தியாகி பயன்படுத்த முடியாது.

இதனால், பொதுமக்கள் பெரும்பாலும் அவரை காய்களை மொத்தமாக வாங்க தயக்கம் காட்டி வருகின்றனர். மாவட்டத்தில் அதிகளவு அவரை உற்பத்தியாகியும், அவற்றை விற்பனை செய்யும் வழிமுறை தெரியாமல் விவசாயிகள் நஷ்டமடைந்து வருகின்றனர்.

ஓசூரில் விவசாயிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து, பொதுமக்கள் மத்தியில் அவரை விற்பனையை ஊக்குவிக்க அவரை மூலம் 40 வகை உணவுகளை தயாரித்தும், அவற்றை பதப்படுத்தி நீண்ட நாள் உணவு தயாரிக்க பயன்படுத்தும் முறை குறித்தும் எம்.ஜி., சாலையில் உள்ள திருமண மண்டபத்தில் விழிப்புணர்வு உணவு திருவிழா நடத்தினர்.நகராட்சி துணை தலைவர் மாதேஸ்வரன், பா.ம. க., மாவட்ட செயலாளர் ஜெயபிரகாஷ், முன்னாள் எம்.எல்.ஏ., வெங்கடசாமி, விவசாயிகள் சங்க ஸ்ரீராம்ரெட்டி மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இது குறித்து ஸ்ரீராம்ரெட்டி கூறியதாவது: அவரை மூலம் அவரை தோசை, ராகிரோடி, அரிசி ரோடி, பிதுகம்பருப்பு தோசை, பிதுகம் பருப்பு வடை, உப்புமா, பூரி, எள்ளாவரே, போலி, பர்பி, களி, சித்ரான்னம், மிளகு மசலா மிக்ஸ், நிப்பட்டு உள்ளிட்ட 40க்கும் மேற்பட்ட உணவு வகைகள் தயாரிக்கலம்.

### எந்த மண்ணுக்கு, என்ன வகை உரம் தேவை? தகவல் பெற புதிய "சாப்ட்வேர்' அறிமுகம்

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2010,23:17 IST

கோவை : ""மண்ணுக்கு எந்த வகையான உரம் தேவை என்பதை கண்டறிய உதவும் "டிசிபையர்' எனும் கம்ப்யூட்டர் சாப்ட்வேரை, கோவை வேளாண் பல்கலை ஆராய்ச்சியின் வாயிலாக வடிவமைத்துள்ளது. மாநிலம் முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு இந்த சாப்ட்வேர் பயன் தரும்,'' என, கோவை வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி கூறினார்.

தென் மண்டல மாநில மண் பரிசோதனை வல்லுனர்களுக்கான கருத்தரங்கு மற்றும் பயிற்சி துவக்க விழா, கோவை வேளாண் பல்கலையில் நேற்று நடந்தது. தமிழகம் உட்பட கர்நாடகா, கேரளா, ஆந்திர மாநிலங்களை சேர்ந்த 100 பேர் பங்கேற்றனர்.

பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி பேசியதாவது: நாடு சுதந்திரம் பெற்ற பின் மக்கள் தொகை மூன்று மடங்கும், உணவு உற்பத்தி நான்கு மடங்கும் உயர்ந்து விட்டது. 60 ஆண்டுகளில் இந்தியாவின் உணவு தானிய உற்பத்தி 23 கோடி டன்கள் உயர்ந்துள்ளது. ஆனால் 1990 முதல் உற்பத்தி விகிதம் ஆண்டுக்கு 1.9 சதவீதம் வீழ்ச்சி அடைந்து வருகிறது.

மண்ணில் ஏற்பட்டுள்ள ஊட்டச்சத்து குறைபாடுதான் முக்கிய காரணம். இதை உணர்ந்துள்ள மத்திய, மாநில அரசுகள், மண் பரிசோதனைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கத் துவங்கியுள்ளன. கோவை வேளாண் பல்கலையில் நவீன மண் பரிசோதனை மையம் உள்ளது. இங்கு மண் பரிசோதனைக்கு நூறு ரூபாய் கட்டணம் பெறப்படுகிறது. மூன்று ஆண்டுகளில் மூன்று லட்சம் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

கோவை வேளாண் பல்கலை இதுவரை 686 பரிசோதனைக் கூடங்களை உருவாக்கியுள்ளது. இவற்றில் ஆண்டுக்கு 7 லட்சம் மண் மாதிரிகளை பரிசோதிக்க முடியும். மண்ணின் தரத்தை மேம்படுத்துவதில் தமிழக அரசு அதிக முன்னுரிமை அளிக்கிறது.
அதிக விவசாயிகள் பலன் பெற, மாநிலம் முழுவதும் ஏராளமான மொபைல் மண் பரிசோதனை லேப்கள் துவக்கப்பட்டுள்ளன.
கோவை வேளாண் பல்கலையில் உருவாக்கப்பட்ட "மண் நல அட்டைகள்' மண்ணின் தரத்தை பரிசோதிக்க மாநிலம் முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இதை பயன்படுத்தி மண்ணுக்குத் தேவையான நுண்ணூட்டச் சத்துக்களை விவசாயிகளால் மேம்படுத்த முடியும். தமிழகம் முழுவதும் உள்ள 46 லேப்களால் 11.33 லட்சம் மண் மாதிரிகளை பரிசோதிக்க முடியும். அனைத்து பண்ணை நிலங்களுக்கும் இது போதாது.

ஒரு குறிப்பிட்ட மண்ணுக்கு எந்த வகையான உரம் தேவை என்பதை கண்டறிய உதவும் "டிசிபையர்' எனும் கம்ப்யூட்டர் சாப்ட்வேரை, கோவை வேளாண் பல்கலை ஆராய்ச்சியின் வாயிலாக வடிவமைத்துள்ளது. மாநிலம் முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு இந்த சாப்ட்வேர் பயன் தரும்.இவ்வாறு, துணைவேந்தர் முருகேசபூபதி பேசினார். பல்கலையின் மண் அறிவியல் துறைத்தலைவர் வேலு, முன்னாள் இயக்குனர் வேலாயுதம் உட்பட பலர் பங்கேற்றனர்.

விழாவில் மாநில நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் சாமிநாதன் பேசியதாவது: பயிர் உற்பத்தி

மற்றும் மண் ஆய்வுகள் குறித்த தகவல்கள், உரிய நேரத்தில் விவசாயிகளை சென்றடைவது முக்கியம். டாக்டரிடம் உடலை பரிசோதித்து மருந்து பெற்றுக் கொள்வது போல் மண்ணின் நலத்தையும் அவ்வப்போது சோதனை செய்து கொள்வது, உற்பத்தி பெருக உதவும். முன்பு மண்ணில் ஏராளமான புழுக்கள் இருந்தன.

செயற்கை ரசாயன உரங்கள் அதிகரிப்பால் இன்று மண் புழுக்களை காண முடிவதில்லை. அருகில் உள்ள உரக்கடைகளில் வாங்குவதாலும், கடனுக்கு உரம் வாங்குவதாலும், தரமற்ற உரங்கள் பயன்படுத்தப்படுவது அதிகரித்து விட்டது. இந்த விஷயத்தில் விவசாயிகள் அதிக விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். "அக்ரி கிளினிக்' பரிசோதனை மையங்களில் மண்ணுக்கு ஏற்ற உரத்தை பரிசோதித்து பெறுவது நல்லது. இவ்வாறு, அமைச்சர் சாமிநாதன் பேசினார்.

**வேளாண் பல்கலை பேராசிரியர்களுக்கு உர மேலாண்மை ஆராய்ச்சிக்கான விருது**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2010,00:24 IST

கோவை : தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர் மற்றும் பல்கலை வேதியியல் துறை பேராசிரியர்களுக்கு உர மேலாண்மை ஆராய்ச்சிக்கான பொன்விழா விருது வழங்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, தமிழ்நாடு வேளாண் பல்கலை வெளியிட்ட அறிக்கை: சிறிய வெங்காயம், வெண்டை, முட்டைக்கோசு, காரட், உருளைக்கிழங்கு, மிளகாய், மரவள்ளி ஆகிய காய்கறிப் பயிர்களுக்கான உர மேலாண்மை ஆராய்ச் சியில் ஈடுபட்டதற்காக, பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி, மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை பேராசிரியர்கள் சாந்தி, நடேசன் ஆகியோருக்கு டில்லியில் உள்ள இந்திய உரச்சங்கம் சார்பில், 2010ம் ஆண்டுக்கான பொன்விழா விருது வழங்கப்பட்டுள்ளது. சான்றிதழ், தங்கப்பதக்கம் மற்றும் 20 ஆயிரம் ரூபாய் ரொக்கம் கொண்ட இவ்விருதை, டில்லியில் நடந்த இந்திய உரச்சங்கத்தின் ஆண்டு கருத்தரங்கில், பல்கலை ஆராய்ச்சிக்குழு சார்பில் பேராசிரியர் சாந்தி பெற்றுக்கொண்டார்.

பல்கலை ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்ட உரப்பரிந்துறை திட்டமானது காய்கறி சாகுபடிப் பகுதிகளில் பயிர்ச் சத்து மறுசுழற்சி செய்யவும், பயிர்ச் சத்து உபயோகத்திறனை அதிகரிக்கவும் உறுதுணையாக இருக்கும். இவ்வாராய்ச்சியின் ஒருங்கிணைந்த உரப் பரிந்துரைகள், மண் ஆய்வு மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை மையம் மூலம் "டெசிபர்' குறுந்தகடுகள் வடிவில் வெளியிடப் பட்டுள்ளது.  இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ரூ.7.75 லட்சத்துக்கு வாழைக்காய் ஏலம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2010,23:05 IST

அவிநாசி : அவிநாசி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.7.75 லட்சத்துக்கு வாழைக்காய் ஏல வர்த்தகம் நடந்தது.அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத் தில் நடந்த வாழைக்காய் ஏலத்துக்கு, இந்த வாரம் 9,582 தார் வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை காட்டிலும் 1,382 தார் அதிகம். இருப்பினும், நேந்திரன், கதலி ரக வாழை விலை குறைந்து விட்டது. ஏலத்தில் நேந்திரன் ரகம் கிலோவுக்கு ரூ.14 முதல் ரூ.16.70 வரை, கதலி ரூ.12 முதல் ரூ.14 வரை ஏலத்தில் எடுக்கப் பட்டது. 147 விவசாயிகள், 13 வியாபாரிகள் பங்கேற்றனர். ரூ.7.75 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது.
தனி அலுவலர் பழனிசாமி கூறுகையில், ""இந்த வாரம் வரத்து அதிகரித்தது; கடந்த வாரத்தை விட நேந்திரன் ரகம் ரூ.4 குறைந்து விட்டது. வரத்து அதிகமானதாலும், தரம் சற்று குறைவாக இருந்ததாலும் விலை குறைந்தது. அடுத்த வாரத்தில் இருந்து வரத்து தொடர்ந்து அதிகரிக்கும் என்று எதிர்பார்க் கிறோம்," என்றார்.

**வேளாண், தோட்டக்கலைக்கு சிறப்பு பரிசு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2010,23:03 IST

திருப்பூர் : பயனுள்ள கண்காட்சி அரங்கு அமைத்ததற்காக, வேளாண் துறை மற்றும் தோட்டக்கலைத்துறைக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டுள்ளது.
பல்துறை பணி விளக்க முகாம், திருப்பூர் டவுன்ஹாலில் நடந்தது. வேளாண் துறை, தோட்டக்கலைத்துறை என அனைத்து அரசு துறைகள் சார்பில் அரங்கு அமைக்கப்பட்டிருந்தது. கண்காட்சி வளாகத்துக்கு முன், தோட்டக்கலைத்துறை சார்பில், பழங்கள் மற்றும் காய்கறிகளால் அமைக்கப்பட்ட அலங்கார வளைவு அமைக்கப்பட்டிருந்தது.
திசு வாழை, நேந்திரன் வாழை தார், பழம், காய்கறி, தென்னை ரகம்; வேளாண் துறை சார்பில், மண்புழு உரம், ராஜராஜ சோழன் நெல், விவசாயத்தை கண் முன் நிறுத்தினர். இரு துறைகள் சார்பில் கடந்தாண்டுகளில் செய்யப்பட்ட, இந்தாண்டு செய்யப்படும் பணிகளின் அட்டவணை வைக்கப்பட்டிருந்தது. மக்களுக்கு பயனுள்ள வகையில் அரங்கம் அமைத்த, வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறைக்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது.

கத்தரி விலை கிலோவுக்கு 10 ரூபாய் அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2010,23:05 IST

திருப்பூர் : மீண்டும் மழை துவங்கி இருப் பதால், கத்தரிக்காய் விலை அதிகரிக்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது. கடந்த ஒரு வாரத்தில் உழவர் சந்தையில், கிலோவுக்கு 10 ரூபாய் அதிகரித்துள்ளது.
வட கிழக்கு பருவ மழை தீவிரத் தால், கடந்த 10 நாட்களாக காய்கறி விலை உச்சத்தில் இருக்கிறது. தென்னம்பாளையம் காய்கறி மார்க்கெட் மற்றும் உழவர் சந்தையில், கிலோவுக்கு 10 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை வேறுபாடு காணப் படுகிறது. உழவர் சந்தையில் நுகர் வோரும், தென்னம்பாளையம் மார்க்கெட்டில், உள்ளூர், வெளியூர் வியாபாரிகள் வாங்குகின்றனர். மழை காரணமாக வரத்து குறைந்திருப்பதால், வியாபாரிகள் இடையே கடும் போட்டி நிலவுகிறது; விலை "கிடுகிடு'வென உயர்கிறது.

விளைச்சல் குறைந்தாலும், அதிக விலைக்கு விற்பது விவசாயிகள் இடையே மகிழ்ச்சியை ஏற் படுத்தியுள்ளது. காய்கறி மார்க் கெட்டில், தக்காளி ஐந்து கிலோ கூடை 150 ரூபாய்; சின்ன வெங்காயம் 20 கிலோ சிப்பம் 700; பாகல் 250 முதல் 300 வரை; வரிக்கத்தரி 800; பவானி கத்தரி 1,100; பச்சை மிளகாய் 400 ரூபாய் வரை விற்றது.
வடக்கு உழவர் சந்தை அலுவலர் கூறியதாவது: கடந்த ஒரு வாரத்தில் கத்தரி கிலோ 50 ரூபாயில் இருந்து 60 ரூபாயாக உயர்ந்துள்ளது. மழை மீண்டும் துவங்கியுள்ளதால், கத்தரி வரத்து குறையும் வாய்ப் புள்ளது. தினமும் 400 கிலோ மட்டும் வருகிறது. நுகர்வோர் மற்றும் விவசாயிகள் நலன் கருதி, வெளிமார்க்கெட்டை காட்டிலும், சற்று குறைவான விலைக்கு காய்கறிகள் விற்பனை செய்யப் படுகின்றன.

தக்காளி ஒரு கிலோ 30 ரூபாய்; கத்தரி 60; வெண்டை 20; புடலை 30; பாகல் 30; பீர்க்கன் 34; அவரை 50; சின்ன வெங்காயம் 24 முதல் 30 வரை; பெரிய வெங்காயம் 30 முதல் 40 வரை; பீன்ஸ் 35; கேரட் 40; உருளை 24; கோஸ் 20; மேரக்காய் 16; கொத்தமல்லி 24; கறிவேப்பிலை 20; புதினா 18; கீரை வகை 15; கொய்யா 20; சப் போட்டா 18; மரவள்ளி 14; பொறியல்தட்டை 18; கொத்தவரை 20; பூசணி மற்றும் அரசாணி 8 முதல் 10 வரை; வாழை பழம் 20; நேந்திரன் மற்றும் செவ்வாழை 24 ரூபாய்க்கு விற்கிறது, என்றார்.
பனியால் பூ விலை உயர்வு தொடரும்: பூ வியாபாரிகள் சங்க செயலாளர் சக்திவேல் கூறுகையில், ""பனி காலம் துவங்கி விட்டதால், பூக்களின் விலை தொடர்ந்து உயர்வாக இருக்கும். வரும் மாசி மாதத்தில் தான் பூ சீசன் துவங்கும். அதற்குள் பனி குறைந்து, பூ விளைச்சல் அதிகரித்தால் மட்டும் விலை குறையும். மல்லிகை ஒரு கிலோ 300 முதல் 400 ரூபாய் வரை; சம்பங்கி 70 முதல் 80 வரை;

செவ்வந்தி 120; பட்டுப்பூ 50 முதல் 60 வரை; அரளி 250; முல்லை மற்றும் ஜாதி முல்லை 320; மாலை சிறியது 40, பெரியது 150 ரூபாய் வரை விற்கிறது," என்றார்.
புளி கிலோ 20 ரூபாய் அதிகரிப்பு: திருப்பூர் மார்க்கெட் வியாபாரிகள் சங்க தலைவர் பாலசுப்ரமணியம் கூறுகையில், ""தொடர் மழை காரணமாக, வரமிளகாய் மற்றும் புளி வரத்து பாதித்துள்ளது. ஒரு கிலோ மிளகாய் 6 ரூபாய் உயர்ந்து 66; புளி 20 ரூபாய் அதிகரித்து 85 ரூபாய்க்கு விற்பனையாகிறது. அஸ்கா ஒரு கிலோ 32 ரூபாய்; பச்சை பயறு 57; பாசிப்பருப்பு 62; துவரம் பருப்பு 48 முதல் 52 வரை; கருப்பு உளுந்து 58; உருட்டு உளுந்து 76; தட்டை பயறு 34; கொள்ளு 22 ரூபாய்க்கு விற்கிறது," என்றார்.

சமையல் ஆயில் விலை குறையாது: திருப்பூர் சமையல் ஆயில் வியாபாரிகள் சங்க தலைவர் சந்திரன் கூறுகையில், ""ரீபன்ட் ஆயில் ஒரு கிலோ 98 ரூபாய்; சூரியகாந்தி 82; நல்லெண்ணெய் 90; விளக்கெண்ணெய் 100; தேங் காய் எண்ணெய் 90; கடலை எண் ணெய் 89; பாமாயில் 60; நெய் 280 ரூபாய்க்கு விற்கிறது. சரக்கு வரத்து குறைவு மற்றும் மழை காரணமாக தொடர்ந்து விலை உயர்வு இருக் கும். விலை இறங்குவதற்கான வாய்ப்பு இல்லை.

எண்ணெய் வித்து விளைச்சல் சரிந்துள்ளது. விவசாய நிலை மேம்பட்டால் மட்டுமே வரத்து சீர்படும்," என்றார்.
தங்கம் வாங்கும் திறன் குறைகிறது: தங்க நகை வியாபாரிகள் சங்க அலுவலர் கூறுகையில், "தங்கத்தின் விலை அதிகரித்துச் செல்வது, வாங்குவோரிடம் குழப் பமான சூழலை உருவாக்கியுள்ளது. ஏழை மற்றும் நடுத்தர மக்கள் வாங்கும் அளவை, விலையேற்றம் குறைத்து விட்டது. விற் பனை பாதிப்படைவதால், வியாபாரிகள் வருத்தம் அடைந்துள்ளனர். விலை உயர்வு, இந்தாண்டு விற்பனையை கூடுதலாக பாதிக் கும். இன்று ஒரு கிராம் தங்கம் 1,940 ரூபாய்; ஒரு பவுன் 15,520; ஒரு கிராம் வெள்ளி 48 ரூபாய்க்கு விற்கிறது,' என்றார்.

**சீரான விலையில் ஆப்பிள்கள்**

மதுரை : மதுரைக்கு ஆப்பிள் வரத்து அதிகரித்த போதிலும், சீரான விலையிலேயே விற்கப்படுகின்றன. பழங்கள் விலை குறித்து, யானைக்கல் வியாபாரி செந்தில் கூறியதாவது : நேற்று ஒரு கிலோ ஆப்பிள் 80 -120 ரூபாய், சாத்துக்குடி 50, காபூல் மாதுளை 140, சீட்லெஸ் மாதுளை 90, சோனா திராட்சை 80, மஸ்கட் திராட்சை 120, பன்னீர் திராட்சை 40, மால்டா ஆரஞ்சு 60, ஆஸி., ஆரஞ்சு 120, ஆஸி., கிரேப் 220, கிரானி எனும் பச்சை நிற ஆப்பிள் 140, சீத்தாப்பழம் 25, மோரீஸ் வாழைப்பழம் 20, சப்போட்டா 20, அன்னாசி 25, பப்பாளி 15, மலைவாழைப்பழம் ஒன்று 5 ரூபாய்க்கு விற்கப்படுகிறது, என்றார்.

**களைகட்டும் மொச்சை சீசன்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 14,2010,23:30 IST

மதுரை : மதுரையில் மொச்சை பயறு சீசன் களைகட்ட ஆரம்பித்துள்ளது. மாட்டுத்தாவணி காய்கறி மார்க்கெட்டில் கிலோ 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.
மற்ற காய்கறி விலை குறித்து, சங்கத் தலைவர் பி.எஸ். முருகன் கூறியதாவது :நேற்று ஒரு கிலோ தக்காளி 20 ரூபாய், உருட்டு தக்காளி 18, கத்தரிக்காய் 40, வெள்ளை கத்தரிக்காய் 20, பூசணிக்காய் 5, புடலங்காய் 20, வெண்டைக்காய் 20, கேரட் 25, பீட்ரூட் 15, முள்ளங்கி 16, காலிபிளவர் 4-7, முட்டைகோஸ் 15, வெங்காயம் 15-20, பாகற்காய் 20, சிறியது 30, இஞ்சி 30, உருளைகிழங்கு 15-18, சேனைகிழங்கு 18, கருணைகிழங்கு 20, பீன்ஸ் 25, பட்டாணி 40, பட்டர் பீன்ஸ் 50, சோயா பீன்ஸ் 50, அவரைக்காய் 30, கொத்தவரை 10, சவ்சவ் 15, நூக்கல் 25, பீர்க்கங்காய் 20, பச்சை மிளகாய் 20, ஆந்திர பச்சை மிளகாய் 15, கீரை வகைகள் 15, கொத்தமல்லி 25, கறிவேப்பிலை 15, புதினா 10, முருங்கைக்காய் 50 ரூபாய்க்கு விற்கப்பட்டது, என்றார். இந்த மார்க்கெட் விலைக்கும், மற்ற இடங்களில் விற்கப்படும் காய்கறி விலைக்கும் சம்பந்தமில்லை.

**அரிசி புதுரகம் விலை குறையும்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 14,2010,23:29 IST

மதுரை : மதுரையில் சில மாதங்களாகவே அரிசி விலை சீராக உள்ளது. "இன்னும் 15 நாட்களில் புதுரகம் வரவிருப்பதால், அதன் விலை குறையும்' என்கிறார் அரிசி ஆலை உரிமையாளர் சங்கச் செயலாளர் சந்திரன்.நேற்றைய அரிசி விலை குறித்து கூறியதாவது :  ஒரு கிலோ கர்நாடக பொன்னி பழசு 38.50 ரூபாய், புதுசு 29 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. டீலக்ஸ் பொன்னி பழசு 32.50 ரூபாய்க்கும், புதுசு 24 ரூபாய்க்கும், வெள்ளை பொன்னி பழசு 35.50, புதுசு 26க்கும், செல்லப் பொன்னி பழசு 23.50, புதுசு 20க்கும் விற்கப்பட்டது.ஐ.ஆர். இருபது பழசு 23 ரூபாய், புதுசு 21 ரூபாய், ஐ.ஆர். 36 பழசு 22 ரூபாய், புதுசு 20 ரூபாய்க்கு விற்கப்பட்டது. பச்சரிசி சூப்பர் சன்னம் முதல் ரகம் 37 ரூபாய், அடுத்த ரகம் 30, புதுசு 28லிருந்து 29 ரூபாய், மாவு பச்சரிசி பழசு 21, பிரியாணி அரிசி முதல் ரகம் 53, அடுத்த ரகம் 52, 50 ரூபாய்க்கும், புதுசு 45 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. அரைவேக்காட்டு அரிசி கிலோ 27 முதல் 24 ரூபாய் வரை விற்கப்படுகிறது, என்றார். மொத்தம் மற்றும் சில்லரை கடைகளில் ஒரு ரூபாய் முதல் மூன்று ரூபாய் வரை விலை மாறுபடுகிறது.

பாமாயில் டின்னுக்கு ரூ.30 உயரும்

பதிவு செய்த நாள் : டிசம்பர் 14,2010,23:30 IST

மதுரை : மலேசியா,இந்தோஷினியாவில் தொடர் மழையாலும், இருப்பு குறைவாலும், மதுரையில் பாமாயில் விலை டின்னுக்கு (15 கிலோ) 15 ரூபாய் அதிகரித்துள்ளது.
எண்ணெய் வியாபாரிகள் சங்க நிர்வாகி கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது : கடந்த மாதம் முதலே பாமாயில் டின்னுக்கு 100 ரூபாய் வரை அதிகரித்தது. இன்னும் சில நாட்களில் 30 ரூபாய் உயர்ந்தாலும் ஆச்சரியமில்லை.கடந்த வாரம் 900 ரூபாய்க்கு விற்ற 15 கிலோ டின் பாமாயில், நேற்று 915 ரூபாய்க்கும், சூரியகாந்தி எண்ணெய் 1140 ரூபாயில் இருந்து 1160 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. வனஸ்பதி 960 ரூபாயில் இருந்து 970 ரூபாயாகவும், நல்லெண்ணெய் 1250 ரூபாயில் இருந்து 1260 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. நயம் தும்பை எள் தட்டுப்பாட்டால், தும்பை நல்லெண்ணெய் 1700 ரூபாயில் இருந்து 1750க்கும், ரைஸ்பிரான் ஆயில் 930 ரூபாயில் இருந்து 945 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. கடலை எண்ணெய் 1200 ரூபாய், தேங்காய் எண்ணெய் 1400 ரூபாய்என்பதில் மாற்றமில்லை, என்றார்.

தினத் தந்தி

## *தாவர எண்ணெய் இறக்குமதி 6.68 லட்சம் டன்னாக சரிவு*



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

சென்ற நவம்பர் மாதத்தில் நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி 11 சதவீதம் சரிவடைந்து 6.68 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. நடப்பாண்டில் அதிக அளவில் பருவ மழை பெய்து, உள்நாட்டில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி அதிகரித்துள்ளதுதான் இதற்கு காரணமாகும்.

வறட்சி

சென்ற 2009–ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நாட்டின் பல மாநிலங்களில் கடும் வறட்சி நிலவியது. இதன் காரணமாக 7.53 லட்சம் டன் தாவர எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டது. சென்ற 2009–10–ஆம் எண்ணெய் பருவத்தில் (நவம்பர்– அக்டோபர்) தாவர எண்ணெய் இறக்குமதி 6.6 சதவீதம் அதிகரித்து 92.4 லட்சம் டன்னாக உயர்ந்தது. இதற்கு முந்தைய ஆண்டில் இது 86.60 லட்சம் டன்னாக இருந்தது. சென்ற நவம்பர் மாதத்தில், சமையல் எண்ணெய் இறக்குமதி 6.50 லட்சம் டன்னாகவும், சமையல் அல்லாத இதர பயன்பாட்டிற்கான எண்ணெய் இறக்குமதி 16,655 டன்னாகவும் இருந்தது. அம்மாதத்தில் பாமாயில் இறக்குமதி 3.5 சதவீதம் குறைந்துள்ளது. சோயா எண்ணெய் இறக்குமதி 59 சதவீதம் சரிவடைந்துள்ளது. இந்தோனேஷியா, மலேசியா ஆகிய நாடுகளில் இருந்து அதிக அளவில் பாமாயில் இறக்குமதி செய்யப்படுகிறது.

எண்ணெய் வித்துக்கள்

சென்ற கரீஃப் பருவத்தில் நாட்டின் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 1.73 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது சென்ற ஆண்டின் இதே பருவத்தின் உற்பத்தியை விட 10.2 சதவீதம் அதிகமாக இருக்கும்.

நடப்பாண்டில் பருவ மழை நல்ல அளவில் பெய்துள்ளது. மேலும் விதைப்பு பணிகள் விறுவிறுப்புடன் நடைபெற்றுள்ளன. இதனால் உள்நாட்டில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி அதிகரிக்கும் என்று தெரிகிறது. நடப்பு 2010–11–ஆம் ஆண்டின் சந்தைப்படுத்தும் பருவத்தில் (நவம்பர் – அக்டோபர்) நாட்டின் சமையல் எண்ணெய் இறக்குமதி சுமார் 90 லட்சம் டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நடப்பு 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் இந்தியாவின் பருத்தி உற்பத்தி 3.25 கோடி பொதிகளாக இருக்கும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

மும்பை

நடப்பு 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் (அக்டோபர்– செப்டம்பர்), நம் நாட்டில் பருத்தி உற்பத்தி 3.25 கோடி பொதிகளாக (ஒரு பொதி 170 கிலோ) உயரும் என ஜவுளி ஆணையர் ஏ.பீ.ஜோஷி தெரிவித்தார். அண்மையில், மும்பையில் ஃபிக்கி அமைப்பு ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட அவர் இத்தகவலை வெளியிட்டார்.

மழையால் பாதிப்பு

இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட மதிப்பீடுகளில் நடப்பு பருவத்தில் 3.35 கோடி முதல் 3.50 கோடி பருத்தி பொதிகள் உற்பத்தியாகும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. அண்மையில் பெய்த கனமழையால் பருத்தி உற்பத்தி குறித்து மறுமதிப்பீடு செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது. குறிப்பாக ஆந்திரா போன்ற தென் மாநிலங்களில் புயல், மழையால் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதே சமயம் மகாராஷ்டிரா உள்ளிட்ட சில மாநிலங்களில் மழையால் பருத்தி உற்பத்தி அதிகரிக்கும் நிலை உருவாகியுள்ளது என ஜோஷி மேலும் கூறினார்.

பருத்தி ஆலோசனை வாரியம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தின்படி, 2008–09–ஆம் ஆண்டு பருவத்தில், தமிழ்நாட்டில் 1.09 லட்சம் ஹெக்டேர் நிலத்தில் பருத்தி சாகுபடிமேற்கொள்ளப்பட்டது. இது, 2009–10 பருவத்தில் 1.04 லட்சம் ஹெக்டேராக சரிவடைந்தது. 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் 95,000 ஹெக்டேர் பரப்பளவில்தான்

பருத்தி சாகுபடி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜவுளி, பருத்தி துறைகள் அதிக அளவில் வேலைவாய்ப்புகளை வழங்குகின்றன. பருத்தி சாகுபடி, வர்த்தகம் மற்றும் பதப்படுத்துதல் ஆகிய அனைத்துப் பிரிவுகளிலுமாக இத்துறை சுமார் 5 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது. பருத்தியை மூலப்பொருளாக கொண்டு பல்வேறு தயாரிப்புகளை அளிப்பதில் உலக அளவில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. தற்போது நம் நாட்டில் 2.20 கோடி பருத்தி பொதிகளுக்கு தேவைப்பாடு உள்ளது.

ஜவுளி துறை

இந்திய ஜவுளித் துறையில் பருத்தி உற்பத்தி துறையின் பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பருத்தி உற்பத்தி, பயன்பாடு, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி போன்ற அனைத்து பிரிவுகளிலும் ஏற்படும் ஏற்ற, இறக்கங்கள் நேரடியாக ஜவுளி துறையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சர்வதேச அளவில் பருத்தி உற்பத்தியில் இந்தியாவின் பங்களிப்பு சுமார் 17 சதவீதமாக உள்ளது. நம் நாட்டில் ஏறக்குறைய ஒரு கோடி ஹெக்டேர் பரப்பளவில் பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஜவளி ரகங்களில் பருத்தியின் பங்களிப்பு சுமார் 45 சதவீதம் என்ற அளவில் உள்ளது.